**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | |
|---|---|---|
| Calendar .. .. | ) | |
| Miscellaneous .. .. | ) | **Sessions Case No. 89/2020** |
| Preliminary Register .. .. | ) | |
| Sessions .. .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW4** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | விக்னேஷ்வரன் |
| Father's Name | : | கணபதி |
| Village | : | புதுப்பட்டி |
| Taluk | : | திருச்சுழி |
| Caste | : | |
| Calling | : | துணை மேலாளர் |
| Religion | : | |
| Age | : | 31 |

(எதிரிகள் ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **08th day of July 2025.**

முதல் விசாரணை **:** நான் தற்போது புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்த கணேசமூர்த்தி மற்றும் அ.சா.1 கலைச்செல்வியை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கலைச்செல்விக்கும், கணேசமூர்த்திக்கும் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியாது. சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 9 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது, சத்தம் கேட்டது. எனது அப்பா

வெளியே சென்று பார்த்தார். நான் வெளியே சென்று பார்த்தபோது கணேசமூர்த்தியை ஆட்டோவில் ஏற்றிகொண்டிருந்தார்கள். அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று, அவரை பார்க்க முடியாது என்று சொல்லி அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். வழக்குசம்பவம் குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டதன் பேரில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**)**

அரசுதரப்பு குறுக்குவிசாரணை

காலைச்செல்வியும் அவரது கணவரும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிந்து இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் - சரியல்ல. 24.05.2020 ம் தேதி இரவு 9 மணிக்கு நானும், எனது அம்மாவும், அப்பாவும் வீட்டில் இருந்தபோது செந்தில்குமார் வீட்டின் பக்கம் சத்தம் கேட்டது, நாங்கள் சென்று பார்த்தபோது, செந்தில்குமார் வீட்டின்முன்பு வைத்து கணேசமூர்த்தியை, செந்தில்குமார், செல்வகுமார், ஆனந்தகுமார் ஆகிய மூவரும் இவன் உயிரோடு இருக்கும்வரை சேர்ந்துவாழ விடமாட்டான் என்று சொல்லி, கீழே தள்ளி காலால் மிதித்தார்கள் என்றும், கணேசமூர்த்தியை, செந்தில்குமார் கட்டையால் தலையால் அடித்தார் என்றும், அதனை நான் நேரடியாக பார்த்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் - சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் Crlmp.No /2025 மனுவானது u/s 231(2)CrPC ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**